தினமணி

# ஹிந்தி ஆலோசனைக் குழு உறுப்பினராக ஐசரி கே. கணேஷ் நியமனம்

**சென்னை, ஆக.18:** ஹிந்தி ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக ஐசரி கே. கணேஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மத்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சகத்தின் சார்பில், மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானியின் தலைமையில் ஹிந்தி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள், மத்திய அமைச்சக செயலர்கள், இணைச் செயலர்கள் உள்ளிட்ட 30 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில், தமிழகத்தில் இருந்து சென்னைப் பல்லாவரத்தில் உள்ள வேல்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் நிறுவனரும், வேந்தருமான டாக்டர் ஐசரி கே. கணேஷ், உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

Date. 19.08.2020 Page. 4